பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

28 01 2025 7 15

செவ்வாய்கிழமை இரவு

தலைப்புச் செய்திகள் -

- 38-வது தேசிய விளையாட்டுப் போட்டிகளை உத்தராகண்ட் மாநிலம் டேராடூனில் வண்ணமிகு நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திரமோடி சற்று முன் தொடங்கி வைத்தார்.
- நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரையொட்டி நாளை மறுநாள் அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.
- சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களில் இந்தியாவின் பங்களிப்பு அதிகரித்து வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
- உத்திரபிரதேச மாநிலம் பாக்பத் மாவட்டத்தில் நிகழ்ச்சி ஒன்றிற்காக அமைக்கப்பட்டிருந்த மேடை சரிந்து விழுந்ததில் ஏழு பேர் உயிரிழந்தனர்.
- இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து முதலில் பேட் செய்து வருகிறது.

<u>*----- இனி விரிவான செய்திகள் ---*</u>

[]<<<>>>[]

38-வது தேசிய விளையாட்டுப் போட்டிகள் வண்ணமிகு கலை நிகழ்ச்சிகளுடன் தற்போது உத்ராகண்ட். இன்று மாலை உத்தகாண்ட் மாநிலம் டேராடூனில் தொடங்கியது.

விளையாட்டுப் போட்டிகளை பிரதமர் திரு நரேந்திரமோடி முறைப்படி தொடங்கி வைத்தார்.

இப்போட்டிகள் இன்று முதல் அடுத்த மாதம் 14-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

35 பிரிவுகளில் இப்போட்டிகள் நடைபெறுகின்றன.

தேசிய விளையாட்டுப் போட்டியில் முதல் முறையாக யோகா மற்றும் மல்லர்கம்பம் போட்டிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

36 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்திலிருந்து பத்தாயிரத்திற்கும் அதிகமான தடகள வீரர்கள் வீராங்கனைகள் இதில் பங்கேற்கின்றனர்.

உத்தரகாண்ட் மாநிலத்தில் 11 நகரங்களில் இப்போட்டிகள் நடைபெறுகின்றன.

[]<<<>>>[]

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரையொட்டி நாளை மறுநாள் அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

பட்ஜெட் கூட்டத்தொடரை சுமூகமாக நடத்துவது தொடர்பாக இதில் விவாதிக்கப்படும் என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பட்ஜெட் கூட்டத்தொடர் இம்மாதம் 31-ஆம் தேதி குயடிரசுத்தலைவர் உரையுடன் தொடங்குகிறது.

வரும் சனிக்கிழமை 2025-26-ஆம் நிதி ஆண்டிற்கான பட்ஜெட்டை நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்கிறார்.

[]<<<>>>[]

சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களில் இந்தியாவின் பங்களிப்பு அதிகரித்து வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அபிதாபியில் நடைபெற்று வரும் ரெய்சினா மாநாட்டில் பேசிய அவர், மத்திய கிழக்கு நாடுகளுக்கு இடையேயான நல்லுறவுகள் வலுவடைந்து வருவதாகக் கூறினார்.

வர்த்தகம், தகவல் தொடர்வு, கலாச்சாரம் உள்ளிட்ட பல துறைகளில் அந்நாடுகளுடனான இருதரப்பு உறவுகள் மேம்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

வளைகுடா நாடுகளுடனான வர்த்தகம் 180 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தியா –மத்தியக் கிழக்கு நாடுகள் - ஐரோப்பா நாடுகளுக்கு இடையேயான பொருளாதார வழித்தடத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

உணவு பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, தொழில்நுட்பம் போன்ற துறைகளில் ஒத்துழைப்புகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை திரு ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

[]<<<>>>[]

ஏற்றுமதியை அதிகரிக்க சரக்கு போக்குவரத்துக்கான செலவுகள் குறைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்திரு நிதின் கட்கரி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அமைச்சர், ட்டிரக் ஓட்டுநர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக சோதனை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அபே திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளதாகக். கூறினார்.

இத்திட்டத்தின் மூலம் கடந்த ஆண்டில் ஆறு மாநிலங்களைச் சேர்ந்த 50 ஆயிரம் ட்டிரக் ஓட்டுநர்களின் வாழ்வாரம் மேம்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் 22 லட்சம் ட்டிரக் ஓட்டுநர்களின் தேவை உள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஐந்த லட்சம் சாலை விபத்துக்கள் நேரிட்டுள்ளதாகவும், இதன் காரணமாக ஒன்று புள்ளி எட்டு லட்சம் உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளதகாவும் அவர் குறிப்பிட்டார்.

சாலை விபத்துக்களில் உயிரிழந்தவர்களில் 66 சதவீதம் பேர் 18 முதல் 34 வயதுடையவர்கள் என்றும் திரு நிதின் கட்கரி கூறினார்.

[]<<<>>>[]

கங்கை போன்ற புனித நதிகளில் நீராடுவது நம்பிக்கை சார்ந்த ஒன்று என்று மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில், ப்ரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்மேளாவில் திரிவேணி சங்கமத்தில் பக்தர்கள் நீராடுவது குறித்து காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜூன கார்கே தெரிவித்த கருத்து மனவேதனை அளிப்பதாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

பிற மதங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடைமுறைகள் போன்றே இந்த புனித நீராடல் நிகழ்வும் நம்பிக்கை சார்ந்த அம்சமாக கருதப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

நாட்டின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் மத்திய அறிவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி குழுமம் முக்கிய பங்கு வகிப்பதாக அத்துறைக்கான இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

லக்னோவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர். புதிய கண்டு பிடிப்புகளுக்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

கொள்கைகளை வகுப்பது, திறன்மேம்பாடு, தொழில் முனைவு, தொழில்துறை மற்றும் சமூக கூட்டாண்மை ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

நவீன தொழில்நுட்பம் மற்றும் சிறந்த நிர்வாகம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் திரு ஜிதேந்திரசிங் கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்.

*(சவுண்ட் பைட் - Song - 8 செகண்ட்ஸ்)*

பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் புனித நீராட வரும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது.

நாளை மவுனி அமாவாசையையொட்டி திரிவேணி சங்கததில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் புனித நீராடுவதற்காக வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனையடுத்து அங்கு ஏழு அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பக்தர்களின் வசதியை கருத்தில் கொண்டு போக்குவரத்து நெரிசலை சமாளிக்க காவல்துறையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மவுனி அமாவாசையையொட்டி பயணிகளின் வசதிக்காக கூடுதலாக 60 சிறப்பு ரயில்களை இயக்க ரயில்வே முடிவு செய்துள்ளது.

பிரயாக்ராஜ் ரயில் நிலையத்திலிருந்து நான்கு நிமிட இடைவெளியில் ரயில்கள் இயக்கப்படும் என்றும், இதற்காக விரிவான எற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ரயில்வே தெரிவித்துள்ளது.

அவசரகால உதவியாக ஏற்படுத்தப்பட்டுள்ள சிறப்பு மருத்துவ முகாம்கள் 24 மணி நேரமும் செயல்படும் வகையில் மருத்துவர்கள் கூடுதலாக பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

*(சவுண்ட் பைட் - Song - 8 செகண்ட்ஸ்)*

[]<<<>>>[]

உத்திரபிரதேச மாநிலம் பாக்பத் மாவட்டத்தில் நிகழ்ச்சி ஒன்றிற்காக அமைக்கப்பட்டிருந்த மரத்திலான மேடை சரிந்து விழுந்ததில் ஏழு பேர் உயிரிழந்தனர். 45 பேர் காயமடைந்தனர்.

நிகழ்ச்சியின்போது மக்கள் மேடை மீது ஏற முயன்றபோது இந்த விபத்து நேரிட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்து குறித்து விசாரணை நடத்த அம்மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார்.

விசாரணை அறிக்கையை ஒருவார காலத்திற்குள் தாக்கல் செய்ய வேண்டுமென்றும் அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மேடை அமைத்த ஒப்பந்ததாரர் கைது செய்யப்பட்டு, அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

தில்லி சட்டச்பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு அடுத்த மாதம் ஐந்தாம் தேதி நடைபெறுவதையொட்டி வாக்குப்பதிவுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகளை வெளியிட தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளது.

இது தொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், வாக்குப்பதிவுக்கு பிந்தய கருத்துக்கணிப்புகளை அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் வாக்குபதிவு நடைபெறும் நாளான மாலை ஆறரை மணி வரை வெளியிடக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை மீறும் நபர்கள் மற்றும் ஊடகங்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

தென்கொரியாவில் கடும் பனிப்பொழிவு நிலவுகிறது.

மலைப்பாங்கான பகுதிகள் மற்றும் ஜெஜூ தீவுகளில் உள்ள சுற்றுலாத் தலங்களில் 120 சென்டி மீட்டர் உயரத்தில் பனிப் படர்ந்துள்ளது.

நாடு முழுவதும் பத்து சென்டிமீட்டர் உயரத்திற்கு பனிபொழிவு காணப்படுவதால் மக்களின் இயல்வு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

[]<<<>>>[]

இந்தியா-வுக்கு எதிரான மூன்றாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்து வரும் இங்கிலாந்து சற்று முன் வரை 3 புள்ளி 3 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 22 ரன் எடுத்துள்ளது.

ராஜ்கோட்டில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இரண்டு போட்டிகளில் வெற்றிபெற்று இந்தியா முன்னிலை வகிக்கிறது

[]<<<>>>[]

19 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் சூப்பர்-6 சுற்றில் இந்தியா 150 ரன் வித்தியாசத்தில் ஸ்காட்லாந்தை வென்றது.

[]<<<>>>[]

தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ப்ரித்வி கிருஷ்ணமூர்த்தி ராய் – கிருஷ்ணபிரசாத் சாய் ப்ரதீக் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் முதல் சுற்றில் இந்த இணை, 16-21, 21-13 என்ற செட்கணக்கில் சிங்கப்பூரின் Eng Koh – Junsuke Kubo இணையை வென்றது.

*End of News*